பக்கங்கள்: 09 விலை : 20/-

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 03 புதன்கிழமை 17.06.2020 கதிர் 92

## சுற்றுலாப் பயணிகளுக்கு மூன்று தடவை பி.சி.ஆர்.

கொழும்பு, ஜூன் 18
எதிர்வரும் ஒகஸ்ட் 01 ஆம் திகதி முதல் அனைத்துச் சுற்றுலாப் பயணிகளும் மூன்று தடவைகள் பி.சி.ஆர் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனச் சுற்றுலா மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

3



# மங்கள – சந்திரிகா இணைந்து அதிரடி ஆட்டத்துக்குத் தயார்!

## அம்மையாரே தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 17**
**அதிகார வெறித்தனத்திலும் பதவி ஆசையிலும் இருப்பவர்களுக்கு எதிராக மங்கள சமரவீரவுடன் இணைந்து அதிரடி ஆட்டம் காட்ட நான் தயாராக இருக்கின்றேன்.**
**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தெரிவித்தார்.**

3

## 15 தேர்தல் விதிமீறல் சம்பவங்கள் யாழில்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணத்தில் தேர்தல் அறிவிக்கப்படத்திலிருந்து இன்று வரை ஒரு தேர்தல் வன்முறைச் சம்பவம் உட்பட 15 தேர்தல் விதிமுறை மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

2

## பயிலுனர் நியமனத்தை திரும்பத்தரக் கோரிக்கை

### யாழ்ப்பாணத்திலிருந்து ஜனாதிபதிக்கு மனு



தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பயிலுனர் செயற்திட்ட உதவியாளர் நியமனத்தினை உடனடியாக மீள வழங்கக் கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயிலுனர்கள் மனு ஒன்றை

2

## நில அளவைகள் திணைக்களத்தின் அலுவலர்களுடன் மக்கள் முறுகல்

### தண்டுவானில் இன்று சம்பவம்

**சண்முகம் தவசீலன்**
நில அளவைகள் திணைக்கள அலுவலர்களுக்கும் தண்டுவான் கிராம மக்களுக்கும் இடையில் இன்று முறுகல் நிலை ஏற்பட்டது.
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தண்டுவான் கிராமத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்ட நிலப் பகுதியை எல்லையிடும் பணிக்காக வருகை தந்த அலுவலர்களுக்கும் மக்களுக்குமே முறுகல் ஏற்பட்டது.
பிரதேசசபையினால் அறிவிக்கப்பட்டுள்ள

2



## கொரோனா ஆபத்து இன்னும் தொடர்ந்தால் தேர்தலை நடத்தாதீர்!

### அரசிடம் கோருகிறார் கிரியெல்ல

கொழும்பு, ஜூன் 17
கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை அச்சுறுத்தல் இன்னும் நாட்டில் தொடர்ந்தால், அரசு பொதுத் தேர்தலை நடத்தக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

2



## புலிகளையும் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தியோருடன் முன்னாள் போராளிகள் கூட்டுச் சேர்வது பச்சைத் துரோகம்

### வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், அதன் தலைவரையும் கொச்சைப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முன்னாள் போராளிகள் இணைவார்களாக இருந்தால் அந்தத்தலைவருக்கும், அவர்களுடன் இணைந்த மாவீரர் குடும்பங்களுக்கும் செய்யும் பச்சைத் துரோகமாக அது இருக்கும்
தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன்

2

## உள்ளூர் லொறி உரிமையாளர்கள் மணற்காட்டில் இன்று போராட்டம்

### மணல் ஏற்ற தடை போடப்பட்டதால்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் மணல் அகழ்வதற்கு உள்ளூர் பாரவூர்தி உரிமையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

2

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்

### பொதுச் செயலாளராக ஜீவன் பிரதித் தலைவராக அனுஷியா



கொழும்பு, ஜூன் 17
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய பொதுச் செயலாளராக ஜீவன் தொண்டமானும் பிரதித் தலைவராக அனுஷியா சிவராஜாவும் இன்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

2

## கம்பரெலிய பதாதைகளிலுள்ள தலைகளை மறைக்க உத்தரவு

### யாழ். அரச அதிபர் விடுத்தார்

யாழ்ப்பாணத்தில் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அரசியல்வாதிகளின் பதாகைகளை அகற்றுவதற்கும் கம்பரெலிய பதாகைகளில் உள்ள அரசியல்வாதிகளின் படங்களை மறைப்பதற்கும் பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன்.

2

## நில அளவைகள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவீடுகளுக்கு அதிகமாக நில அளவைத் திணைக்களத்தினர் அதிகார சபைக்கு நிலம் ஒதுக்கீடு செய்கின்றனர் என்று மக்கள் கொந்தளித்ததே இந்த முறுகலுக்குக் காரணம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ - தர வீதிக்கான அகலம் 33 அடி என்று பிரதேசசபைவரையறைசெய்திருக்கும்நிலையில் நில அளவைத்திணைக்களத்தினர் 66அடிஅளக்கின்றனர்என்றும்முதன்மை வீதிகளில் இருந்து பிரிந்து செல்லும் பி - தர வீதிகளின் ஒதுக்கீட்டு அகலம் 24 அடிஎனபிரதேசசபைவரையறைசெய்திருக்க நில அளவைகள் திணைக்களத்தின் 33 அடிக்கு ஒதுக்கீடு செய்கின்றனர் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டினர். இதற்குத் தமது எதிர்ப்பையும் அவர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச சபைகளிடம் அனுமதி எடுத்து கடைகள், வீடுகள், மதில்கள் மக்களால் கட்டப்பட்டுள்ள நிலையில் நில அளவத்திணைக்களத்தினரின் தற்போதைய எல்லைகள் அவற்றின் உள்ளே வருகின்றன என்கிறார்கள் மக்கள்.

தமது காணிகளை திணைக்களத்தினர் அபகரிக்கப்பார்க்கிறார்கள் என்றும் மக்கள் சாடினர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குஉட்பட்டஉடையார்கட்டு,கோம்பாவில் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்ப்பட்ட ஒதியமலை, மேழிவனம் ஆகிய கிராமங்கள் நில அளவைத்திணைக்களத்தினரால் மக்களின் காணிகளில் எல்லைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் தண்டுவான் பகுதிக்கு நில அளவைகள் திணைக்களத்தினர் சென்றபோதுகிராமமக்கள்ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவித்தனர். அலுவலர்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் தடைகளை ஏற்படுத்தினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மக்களைச் சமாதானப்படுத்த முயன்றனர். எனினும் அவர்கள் விட்டுக்கொடுக்க முன்வராமையால், பிரதேச செயலரிடம் எழுத்து மூலம் முறையிடுமாறும் நாளை அங்கு இது குறித்துக் கலந்துரையாடலாம் என்றும் தெரிவித்து நிலமையைச் சுமுகமாக்கினர்.

## கம்பரெலி ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் வேட்பாளர்களின் பெயர்களை வரைவது தேர்தல் சட்டத்துக்கு விரோதமான செயற்பாடு, இதனை மீறுபவர்கள் மீதுதேர்தல்சட்டத்தின்ஊடாகநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுத் தேர்தலுக்கான பணிகள் மும்மரமாகநடைபெற்றுவருகின்றன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தைக் கருத்தில் கொண்டு செயற்படுமாறு தேர்தல் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பதாகைகள் பொது இடங்களில் காணப்பட்டால் அவற்றை உடனடியாக அகற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கம்பெரலிய திட்டத்தின்போது நாட்டப்பட்டுள்ள பதாகைகளில் உள்ள அரசியல்வாதிகளின் படங்களை ஸ்ரிக்கர் ஊடாக மறைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பல இடங்களில் அவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பயன்படுத்தும் வீதிகளில் வேட்பாளர்களின் பெயர்கள், கட்சியின் சின்னம் ஆகியன வரையப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்தச் செயற்பாடானது முற்றிலும் தேர்தல் சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும். எனவே அவ்வாறான செயலில் ஈடுபடுவார்கள் மீது தேர்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## பயிலுனர் நியமனத்தை திரும்பத்தரக் ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பியுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் ஒன்றுகூடிய பயிலுனர்கள் ஜனாதிபதிக்கான மனுவைமாவட்டச்செயலரிடம்கையளித்தனர்.

அவர்களின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடு முழுவதும் பயிலுனர் செயற்திட்ட உதவியாளர் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அலரி மாளிகையில் ஆனி மற்றும் ஆவணி மாதங்களில் இரண்டு நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்று புரட்டாதி மாதம் 16ஆம் திகதி அகில இலங்கை ரீதியாக பயிலுனர் செயற்திட்ட உதவியாளர் நியமனத்திற்கு 6 ஆயிரத்து 547 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளினது பெயர்ப் பட்டியல் நாடு முழுவதிலுமுள்ள மாவட்டச்செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இதன் நிமித்தம் அனைவரும் தமது மாவட்ட செயலகங்களுக்குச்சென்றுவரவுஇடாப்பில்கையொப்பம் இட்டு வந்தோம்.

மாவட்ட செயலகங்களினால் அவரவரது பிரதேச செயலகங்களுக்கு சில நியமனதாரிகள் கடமையைப் பொறுப்பேற்குமாறு அனுப்பி வைக்கப்பட்டனர். இவ்வாறு நியமனதாரிகள் கையொப்பமிட்டு கடமைகளைப் பொறுப்பேற்றிருந்த நிலையில் 2019.09.18ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருப்பதனால் 2019.09.23ஆம் திகதியன்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அவர்களினால் தற்காலிகமாக இந்த நியமனங்கள் இடைநிறுத்தப்படுவதாக அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் தொலைநகல் ஊடாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் 2019.09.18ஆம் திகதியே தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியாகவும் 2019.09.16ஆம் திகதியே நியமனம் வழங்கப்பட்ட திகதியாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர் 2019.11.18ஆம் திகதியன்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட எங்களது பணிகளை மீளத் தொடர்வதற்கு எங்களது மாவட்டச் செயலகத்திற்குச் சென்றிருந்தோம்.

கௌரவ தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரினால் எமது நியமனம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக தடை நீக்கப்பட்டு மீண்டும் நியமனதாரிகளை பணிக்கு அமர்த்துமாறு தொலைநகல் ஊடாக சுற்றிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த அமைச்சினால் இந் நியமனம் பற்றி ஒரு தகவலும் வழங்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. பின்னர் இந் நியமனத்தை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்வதாக நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த நியமனத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் கடிதம் மூலமும் ஊடகச் சந்திப்புக்களின் மூலமும் அரசிற்கு வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் அரசிடமிருந்து எந்தவொரு பதிலும் எங்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் 6 ஆயிரத்து 547 பேரின் வாழ்க்கை மிகவும் கவலைக்கிடமாகியுள்ளது. சுமார் 8 மாதங்களாக வேலையின்றி எமது வாழ்வாதாரத்தை இழந்து நடுவீதியில் நிற்கின்றோம்.

இன்றைய அசாதாரண சூழ்நிலையில் எம்மில் பலர் பல்வேறு சமூக ரீதியான அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். முன்னர் செய்த தொழில்களும் இல்லை. இத் தொழிலும் கிடைத்தபாடில்லை.

எனவே எமக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தாருங்கள் - என்றுள்ளது

## புலிகளையும் போராட்டத்தையும் ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு இன்று பதில் அளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் போராளிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்வது தொடர்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயும், தமிழரசுக் கட்சிக்குள்ளேயும் முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளது போராட்டத்தையும், தலைவர் பிரபாகரனையும் கடந்த காலத்தில் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் மிக மோசமான முறையில் விமர்சனம் செய்திருந்தார்.

குறிப்பாக புலிகளது போராட்டம் பயங்கரவாதப் போராட்டம், அவர்கள் கொடூரமானவர்கள், அவர்களுக்கும் தமிழ்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியமைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை,பிரபாகரனையோஅல்லதுஆயுதப் போராட்டத்தையோ தாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

இதன் பின்பும், தங்களுடைய தலைவரையும் போராளிகளின் தியாகங்களையும் கொச்சைப்படுத்துகின்ற ஒரு கட்சியோடு முன்னாள் போராளிகள் இணைந்து கொள்வார்களாகவிருந்தால் அது அந்த தலைவருக்கும் அவர்களுடன் இணைந்த மாவீரர் குடும்பங்களுக்கும் அவர்கள் இழைக்கின்ற பெரும் துரோகம்.

தமிழ் அரசுக் கட்சியில் முன்னாள் போராளிகளை இணைத்துக்கொள்வது குறித்து மாவை சேனாதிராசாவும், சுமந்திரனும் அண்மையில் ஊடகங்களில் கருத்து தெரிவித்துள்ளார்கள். உண்மையில் இவர்களுக்கு முன்னாள் போராளிகள் மீது அக்கறை இருந்திருந்தால் போராட்டத்தையும், போராளிகளின் தியாகத்தையும், கடந்த காலத்தில் மதித்து நடந்திருப்பார்கள். குறைந்தது அவர்களது தியாகங்களை கொச்சைப்படுத்தாமலாவது நடந்திருப்பார்கள்.

போராளிகளில் எத்தனையோ துறைசார்ந்தவர்கள் உள்ளார்கள். அவர்களில் மிக அரசியல் அனுபவம் பெற்றவர்கள் உள்ளார்கள். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபை, நாடாளுமன்றம் என்பவற்றில் சந்தர்ப்பம் வழங்கியிருக்கலாம். அல்லது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கியிருக்கலாம்.

போராளிகளில் அக்கறை இருந்திருந்தால் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம். எதுவுமே செய்யாமல் அவர்களது தியாகத்தை மட்டமாகக் கொச்சைப்பாடுத்திவிட்டு தற்போது ஒரு நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இவர்களுக்கு முன்னாள் போராளிகள் மீது அதிக பாசம், பற்று இருப்பதாக காட்டுவது என்பது பொய்யும் புரட்டுமான ஒரு பிரச்சாரம்.

ஆகவே முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள் இப்படியான போலித் தனங்களுக்கு ஆதரவு வழங்காமல் தியாகங்கைகளையும், போராட்டத்தையும் எதிர்காலத்தில் மதித்து நடக்கக் கூடியவர்களுடன் இணைந்து கொள்ள வேண்டும் - எனத் தெரிவித்தார் அவர்.

## உள்ளூர் லொறி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணற்காட்டுப் பகுதியில் உள்ளூர் பாரவூர்தி உரிமையாளர்கள் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 40 மேற்பட்ட பாரவூர்திகளுக்கு திடீரென மணல் அகழ்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

சில வாகனங்களுக்கு மட்டும் அரசியல் கட்சி ஒன்றின் சார்பில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த உள்ளூர் பாரவூர்தி உரிமையாளர்கள் இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமக்கான அனுமதியை வழங்கக்கோரியதுடன்மணல்அகழ்வில் ஈடுபட்ட பாரவூர்திகளை இடைமறித்துப் போராட்டம் நடத்தினர்.

## 15 தேர்தல் விதிமீறல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இன்றுவரை 15 தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள்தேர்தல்சடட விதிகளைமீறியதற்கான முறைப்பாடுகள் ஆகும்.

எனினும் ஒரேயொரு தேர்தல் வன்முறைச் சம்பவமே பதிவாகியுள்ளது.

அது அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவனம் மீதான தாக்குதல் சம்பவம். இதனை விட பெரியளவிலான சம்பவங்கள் எவையும் இதுவரை பதிவாகவில்லை.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாட்டில்ஏற்பட்டுள்ளகொரோனாவைரஸ் தாக்கத்தைக் கவனத்தில் எடுத்து அரசியல் கட்சிகளும்,சுயேச்சைக் குழுக்களும் சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டும். அதேபோல வாக்காளர்களும் சுகாதார முறைகளை பின்பற்றுவது அவசியமானது.

தேர்தல்சடட விதிகளைமீறி வைக்கப்பட்டுள்ள பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன. நிவாரணப் பொருள்களை வழங்கிவிட்டு வேட்பாளர்கள் அதனை முகப்புத்தகத்தில் பதிவிட்டாலும் அதுவும் தேர்தல் விதிமுறை மீறலே. எனவே வேட்பாளர்கள் தேர்தல் சட்டத்தை மதித்து ஜனநாயக தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

## பொதுச் செயலாளராக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவை அடுத்து கட்சியின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக இடைக்கால நிர்வாக சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த இடைக்கால நிர்வாக சபை இன்று புதன்கிழமை காலை 09 மணிக்கு ஒன்று கூடிய நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், கட்சித் தலைமைத்துவத்துக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவையடுத்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு வெற்றிடம் உருவானது.

## கொரோனா ஆபத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் இன்று புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், நாட்டில் தேர்தலை நடத்த முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியிருந்தாலும், இரண்டாவதுஅலையின்அச்சுறுத்தல்தொடர்ந்தும் நீடிக்கிறது என்றும் கூறினார்.

மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் தேர்தலை நடத்தும் நிலையில் நாடு இருக்கிறதா என்பது குறித்து அரசு பொது மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல கேட்டுள்ளார்.

தேர்தலில் வேட்பாளர்கள் பெரும் தொகையைச் செலவிட வேண்டியிருக்கும். எனவே இதுபோன்ற முடிவுகளை இலகுவாக எடுக்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்காளர் சதவீதம் 40 வீதத்துக்கும் குறைவாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# முரணிலை தேசியங்கள்

இலக்கிய உலகிலே ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் மத்தியில் ஒரு பேச்சு வழக்கு உண்டு. மாறி மாறி ஒருவரை ஒருவர் பாராட்டிப் புகழ்வதை அப்படிச் செல்வார்கள்.

“நீங்கள் என் முதுகைச் சொறிய... நான் உங்கள் முதுகைச் சொறிவது...!” என்று அதனை உரையாடல் பாணியில் சொல்வதுண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், பொது ஜன பெரமுனவினரும் தேர்தல் மேடைகளில் மாறி மாறி கூறுகின்றமையைப் பார்க்கும் போது இப்படி மாறி மாறி முதுகு சொறியும் பண்பியல்பு பற்றிய எண்ணம்தான் எழுகின்றது.

ஒருவர் பொதுஜன பெரமுனவின் – மொட்டுக் கட்சியின் – தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ். சட்டத்துறைக் கலாநிதி.

மற்றவர் தமிழ்க் கூட்டமைப்புப் பக்கத்தில் அதன் முக்கியஸ்தர். பேச்சாளர். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். சட்டத்துறை ஜாம்பவான்.

தமிழர் மத்தியில் வடக்கு, கிழக்கில் தமிழ்க் கூட்டமைப்புப் பெரு வெற்றியீட்டும் என்று சிங்களவர்கள் இடையே சென்று எச்சரிக்கை விடுக்கின்றார் பேராசிரியர் பீரிஸ்.

அதேபோல –

சிங்களவர்கள் மத்தியில் – தென்னிலங்கையில் – பொது ஜன பெரமுன பெருவெற்றியீட்டும் என்று தமிழர்கள் இடையே சென்று எச்சரிக்கை செய்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

இருவரும் கூறுகின்ற விடயங்கள் உண்மையாக இருக்கலாம்; யதார்த்தமாக அமையலாம்; அதுதான் மெய்மை நிலைமையாகவும் விளங்கலாம்.

“நான் உன் முதுகைச் சொறிய...நீ என் முதுகைச் சொறி..” என்ற பொதுமைப் பண்பியல்பு இந்த அணுகுமுறையில் உட்கிடையாகப் பொதிந்து கிடப்பதை நாம் மறுப்பதிற்கில்லை.

இலங்கையில் ஆழமாகப் புரையோடிப் போய்க் கிடக்கும் இனமுரண்பாடும், அதனால் எழுந்த பகைமையுணர்வும், நம்பிக்கையீனமும், புரிந்துணர்வின்மையும், முரண்பாடுகளுமே இத்தகைய எதிர்வினை அரசியல் பிரசார அணுகுமுறைகளுக்கு அடிப்படை என்பதை நாம் மறுக்க முடியாது.

இனமுரண்பாட்டு யதார்த்தப் புறநிலைமையே இத்தகைய பிரசார உத்தியை நாடுவதற்கான வசதியான தளமாக அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

வடக்கில் தமிழர் தேசியம் எழுச்சி பெறப் போகின்றது, அதை அடக்கி ஒடுக்கி, நசுக்கி வைத்திருப்பதற்கு சிங்களத் தேசியவாத எழுச்சி மிக்க எங்கள் தரப்பினால் மட்டும்தான் முடியும் என்ற பிரசார உத்தி பௌத்த, சிங்கள பேரினவாதப் போக்குடைய கட்சிகளின் தென்னிலங்கை நிலைப்பாடு.

அதைப் போலவே, தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதிகள் விஸ்வரூபம் எடுக்கின்றனர், அந்தத் தரப்புகளிடமிருந்து தமிழர்தேசத்தைப் பாதுகாப்பது என்றால் தமிழர்கள் ஐக்கியப்பட்டு நின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பது மட்டுமே ஒரே மார்க்கம் என்றுரைக்கும் தந்திரோபாயமே தமிழ்க் கூட்டமைப்பின் ஒரே மார்க்கம்.

வடக்கு, கிழக்கில் கூட்டமைப்பு எழுச்சிகொள்ளப்போகின்றது என்பதை அரசியல் பூச்சாண்டியாகக் காட்டி தென்னிலங்கை வாக்குகளைக் கபளீகரம் செய்வதும் –

தெற்கில் மொட்டுக்கட்சி விஸ்வரூபம் கொள்வதால் அந்தப் பிசாசைக் காட்டி வடக்கு, கிழக்கு வாக்குகளைச் சுருட்டுவதும் –

இந்த இரு தரப்பினரதும் உத்தேசமாகும்.

அதாவது வடக்குக் கிழக்கைக் காட்டி தெற்கிலும் –

தென்னிலங்கையின் மோசமான நிலைமையைக்காட்டி வடக்கு, கிழக்கிலும் –

வாக்குகளைச் சுருட்டுவதே இந்த இரு தரப்பினரதும் ஒரே திட்டம் – மார்க்கம் – ஏற்பாடு – என்பது கண்கூடு.

இனமுரண்பாட்டில் அரசியல் நடத்தும் – வாக்குச் சுருட்டும் – இந்தத் தந்திரோபாய அணுகுமுறை இப்போதைக்கு வெற்றியைத் தேடித் தரலாம். எதிர்பார்த்த வாக்கு வங்கியை அள்ளிச் சுருட்டித் தரலாம்.

ஆனால் நீண்டகால அரசியல் தீர்வுக்கு, பரஸ்பரம் இணக்கமான – புரிந்துணர்வுமிக்க – ஒரு நிரந்தரத் தீர்வை நாடு எட்டுவதற்கு இந்த அணுகுமுறை சரிப்பட்டே வராது என்பது திண்ணம்.

இன முரண்பாடு கடந்து, மற்றைய இனத்தவரையும் மதிக்கும் மாண்புமிக்க அரசியல் தலைமைகள் எழுச்சி கொண்டால் மட்டுமே இவ்வாறு இன முரண்பாட்டில் வாக்குத் திரட்டும் முறைமை ஒழியும்.

ஆனால் இலங்கை போன்ற இன முரண்பாட்டின் உச்சத்தில் இருக்கும் நாட்டில் – இரண்டு எழுச்சி பெற்ற தேசியங்கள் முட்டிமோதி, முரண்பட்டு நிற்கும் தீவில் – அத்தகைய புரிந்துணர்வு மிக்க சமுதாய உருவாக்கம் என்பது சாத்தியமேயற்ற பகல்கனவுதான். அதுவே நிஜநிலைமை.

# அம்பாறையில் தமிழர் பிரதிநித்துவத்தை பாதுகாக்க அனைத்துத் தரப்பும் முனைப்பு



அம்பாறையில் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அனைத்து தரப்பிலும் புத்திஜீவிகள் பொதுமக்கள் அரசியல்வாதிகள் அனைவரும் பாடுபடுகின்றனர் என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளருமான தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலக்கம் 5 இல் போட்டியிடும் இவர் அம்பாறை மாவட்ட தேர்தல் நிலைமை தொடர்பில் செவ்வாய்க்கிழமை விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

மேலும் தனது கருத்தில் –

தமிழர்கள் அம்பாறை மாவட்டத்தில் மூன்றாந் தரப் பிரஜையாக வாழ்ந்துவரும் சூழ்நிலையில் இந்த தேர்தல் மிக முக்கியமான ஒரு தேர்தலாகும். இன்றைய காலகட்டத்தில் தமிழர்கள் விழிப்பாகச் செயற்பட வேண்டும். பல கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. வாக்குகளைச் சிதைக்கவே இந்த வேலை.

கூட்டமைப்பு மீது தமிழ் மக்களுக்குப் பல விமர்சனங்கள் இருந்தாலும், அவை நியாயமானவையாக இருந்தாலும், சூழ்ச்சிகளில் சிக்கிக் கொண்டேமானால் பலமற்ற சமூகமாக மாறிவிடுவோம். அம்பாறையில் தமிழர்களின் இருப்பைக் காப்பற்றவேண்டும். சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது.

இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏனைய கட்சிகள் சுயேச்சைக் குழுக்கள் பெரும் சவாலாக அமையாது. காரணம் அம்பாறையில் எமது தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அனைத்து புத்திஜீவிகளும் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் பாடுபடுகின்றனர். எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன இவற்றைக் குறிவைத்துச் சில அரசியல் கட்சிகள் எமது பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன – என்றார்.

# ‘ஸ்மார்ட்’ சேவை நிலையம் கல்முனையில் இன்று திறப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் முதல் முறையாக கல்முனை பிரதேச செயலகத்தில் பொது மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்கென குளிரூட்டப்பட்ட ‘ஸ்மாட்’ சேவை நிலையம் இன்று பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

பல்வேறு இட நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கிவரும் கல்முனை பிரதேச செயலகமானது 29 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள 14 ஆயிரத்து 500 குடும்பங்களுக்குச் சேவைகள் வழங்கி வருகின்றது.

பொதுமக்கள் தினங்களான திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் அலுவலகத்திற்கு வந்து கடமையாற்றும் கிராம சேவை அதிகாரிகள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வெளிக்கள உத்தியோகத்தர்கள் தங்கு தடையின்றிப் பொதுமக்களுக்குச் சேவை வழங்குதற்காக இந்தப் புதிய சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜஹ்பர், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம். றம்சான், கிராம சேவைகள் நிர்வாக உத்தியோகத்தர் யு.எல்.பதுறுத்தீன் உட்பட கிராம சேவையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மங்கள – சந்திரிகா இணைந்து ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை வாயால் சொல்ல முடியாதளவுக்கு படுமோசமாக இருக்கின்றது. இந்தநிலையில் நாடாளுமன்ற அரசியலிலிருந்து முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர விலகியதை நான் வரவேற்கின்றேன். அவர் அவ்வாறு விலகுவது எனக்கு விருப்பம் இல்லை. எனினும், தற்போதைய நிலைமையில் அவர் விலகியதை வரவேற்கின்றேன்.

மாத்தறை மாவட்ட மக்களின் பெருமதிப்புக்குரியவராக – அன்புக்குரியவராக மங்கள இருக்கின்றார். எனினும், அவர் திடீரென நாடாளுமன்றத் தேர்தல் போட்டியிலிருந்து விலகியமை அம்மாவட்ட மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

நாடாளுமன்ற அரசியலிலிருந்து தான் விலகியமைக்கான காரணங்களை அவர் என்னிடம் நேரில் வந்து தெரிவித்துள்ளார். அவரின் பக்கம் நியாயம் இருக்கின்றது. எனினும், நாடாளுமன்றத்தில் அவரின் பிரதிநிதித்துவம் தவிர்க்க முடியாததாகும்.

தான் நாடாளுமன்றத்துக்கு இனிமேல் செல்லத் தயார் இல்லை என்று அவர் விடாப்பிடியாக இருக்கின்றார். ஆனால், வெளியில் இருந்து அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க அவர் தயாராக இருக்கின்றார். இனிமேல் அவர் முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளுக்கும் நான் பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவேன். ஏனெனில் மக்கள் நிம்மதியுடன் வாழ வேண்டுமெனில் இந்த நாடு உருப்படியாக இருக்க வேண்டும்.

நாட்டில் தற்போது நடக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். அதற்கேற்ற மாதிரி எனது அரசியல் நடவடிக்கைகளை மங்களவுடன் இணைந்து முன்னெடுப்பேன் – என்றார்.

## சுற்றுலாப் பயணிகளுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவாமல் இருப்பதை தடுக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி சுற்றுலாப் பயணிகள் தமது நாட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்தின் எதிர்மறையை உறுதிப்படுத்தும் பி.சி.ஆர். சோதனை முடிவை வைத்திருக்கவேண்டும் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

தொடர்ந்து விமான நிலையங்களில் பயணிகள் தரையிறங்கிய பின்னர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் சோதனை முடிவுகள் அறியப்படும் வரை அனைத்துப் பயணிகளும் விமான நிலையங்களுக்கு அருகிலுள்ள ஹோட்டலில் தங்கவைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, இலங்கையில் தங்கியிருக்கும்போது அனைத்து சுற்றுலாப் பயணிகளும் மேலும் இரண்டு தடவைகள் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது.






# சீனச் சிப்பாய்களுடன் அடிதடி 20 இந்தியச் சிப்பாய்கள் சாவு

## குளிரால் இறந்தனர் என்கிறது இந்தியத் தரப்பு

இந்தியா - சீனா எல்லைப் பகுதியான லடாக்கின் கல் வான் பள்ளத்தாக்கில், இந்திய மற்றும் சீன இராணுவத்தினரிடையே திங்கட்கிழமை இரவு நடந்த மோதலில் உயிரிழந்த இந்தியச் சிப்பாய்களின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது என்று இந்திய இராணுவம் அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதுதொடர்பாக இந்திய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவித்திருப்பதாவது: இந்திய - சீனச் சிப்பாய்கள் இடையே லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் ஏற்பட்ட கைகலப்பில் படுகாயமடைந்த 17 இந்தியச் சிப்பாய்கள் அங்கு நிலவும் பூச்சியத்துக்கும் குறைவான வெப்பநிலை காரணமாக உயிரிழந்தனர். இதனால் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இந்திய ராணுவ துருப்புகளின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது என்றுள்ளது.

இந்த மோதலில் மூன்று இந்தியச் சிப்பாய்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆயுதங்கள் எவற்றையும் பயன்படுத்தாது இந்தியா - சீனச் சிப்பாய்கள் நேரடியாக அடிதடியில் ஈடுபட்டபோதே இந்தியத் தரப்பில் இவ்வளவு இழப்பு நிகழ்ந்துள்ளது. இந்த மோதலின்போது சீனத் தரப்பிலும் பாதிப்பு நிகழ்ந்துள்ளது என்று இந்திய இராணுவம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா - சீனாவிடம் ஐ.நா. வேண்டுகோள்



இந்தியா, சீனா இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில் இரண்டு நாடுகளும் அதிக கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் வேண்டுகோள் விடுத்தார். இந்தியா - சீனா இடையே நடந்த மோதல் மிகுந்த கவலைக்குரியது என்று தெரிவித்துள்ள அவர், இந்தியா - சீனா எல்லையில் நடைபெற்ற வன்முறை மற்றும் உயிரிழப்புகள் மிகுந்த கவலை அளிக்கின்றன இரண்டு நாடுகளும் அதிகபட்ச கட்டுப்பாடுடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். பதற்றத்தைத் தணிப்பதற்கு இரண்டு நாடுகளும் முயற்சி மேற்கொண்டு வருவதாக வெளியாகும் தகவல்களை ஆறுதல் தரும் நிகழ்வுகளாக எடுத்துக்கொள்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மோதல் தொடர விரும்பவில்லை பேசுவதற்கு அழைக்கிறது சீனா

எல்லைப்பிரச்சினை தொடர்பாக எந்த ஒரு மோதலையும் சந்திப்பதற்குச் சீனா விரும்பவில்லை என்று சீனாவின் வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். லடாக் எல்லையின் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் இந்தியா - சீனாப் படைகளுக்கு இடையே நடந்த கைகலப்பில் இந்திய தரப்பில் இதுவரை 20 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர் பலத்த காயமடைந்திருப்பதால், உயிரிழப்பு எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது. இதேபோல் சீனாத் தரப்பில் 35 சிப்பாய்கள் உயிரிழந்திருப்பதாக அமெரிக்கா தெரிவிக்கிறது. ஆனால் சீன தரப்பில் உயிரிழப்புக் குறித் து அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், சீன வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியான் இதுகுறித்துக் கருத்துரைக்கும்போது, எல்லை தொடர்பான விவகாரங்களை பேச்சுகள் முலம் தீர்ப்பதற்கு இந்தியா முன்வரவேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார். இனி எந்த ஒரு மோதலையும் சந்திக்கச் சீனா விரும்பவில்லை. எல்லைப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். தூதரக ரீதியிலும் இராணுவ ரீதியிலும் சமரச முயற்சி நடைபெற்று வருகிறது. நடந்ததில் எது சரி, எது தவறு என்பதில் சீனா அரசு தெளிவாக உள்ளது. இந்தியத் துருப்புகள் நெறிமுறைகளை மீறி சீனத் துருப்புகளை தாக்கின. கால்வான் பள்ளத்தாக்குப் பகுதியின்



இறையாண்மை எப்போதும் சீனாவுக்குச் சொந்தமானது. இப்போது நடந்த சம்பவத்துக்குச் சீனாவைக் குறைகூற முடியாது. இந்தியா தனது முன்களத் துருப்புக்களை ஒழுங்குபடுத்த வேண்டும். அத்துமீறல் மற்றும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என்று அவர் கூறினார்.

## அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சர் ஆலோசனை

சீனாவுடனான மோதலில் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக இந்திய முப்படைத் தளபதிகளுடன் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார். எல்லையில் நடந்த மோதலில் இந்தியச் சிப்பாய்கள் உயிரிழந்தமை பற்றிய தகவல் வெளியானதும் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று முப்படைத் தளபதிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். பின்னர் பிரதமர் மோடியிடம் பேசினார்.

அதேசமயம், எல்லையில் பதற்றத்தைத் தணிக்க இராணுவ உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த நிலையில், பாதுகாப்புத் துறை அமைச்சர் இன்று மீண்டும் ஆலோசனை நடத்தினார். லடாக் பகுதியில் நிலவும் அசாதாரண சூழல் குறித்து முப்படைத் தளபதிகள் மற்றும் தலைமைத் தளபதி ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். சீனாவுடன் ஏற்பட்டுள்ள மோதலில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. தற்போதைய நிலவரம் தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரிடமும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு

இந்தியா-சீனா எல்லைப்பிரச்சினை குறித்துப் பேசுவதற்காக, எதிர்வரும் 19ஆம் திகதி அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடுவதற்கு இந்தியப் பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியா - சீனா எல்லையில் சிப்பாய்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் இந்தியச்சிப்பாய்கள் 20 பேர் உயிரிழந்திருப்பதாக இந்திய ராணுவம் அதிகாரபூர்வமாக தெரிவித்திருக்கிறது. மேலும் சிலர் பலத்த காயமடைந்திருப்பதால், உயிரிழப்பு எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது. இதேபோல் சீனா தரப்பில் 35 சிப்பாய்கள் உயிரிழந்திருப்பதாக அமெரிக்கப் புலனாய்வுத் துறை தெரிவிக்கிறது. இந்நிலையில், இந்தியா - சீனா எல்லைப்பிரச்சினை தொடர்பாக விவாதிக்க, எதிர்வரும்



19ஆம் திகதி அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்குப் பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

காணொலி வாயிலாக நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பார்கள் என்றும் பிரதமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது. எல்லை மோதல் தொடர்பாகப் பிரதமர் மௌனமாக இருப்பது ஏன்? என காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சீனா தரப்பில் 35 பேர் சாவு அமெரிக்க உளவுத்துறை தகவல்

இந்தியா - சீனா இராணுவத்தினருக்கிடையில் லடாக் எல்லையில் ஏற்பட்ட மோதலில் சீனத் தரப்பில் 35 சிப்பாய்கள் உயிரிழந்திருப்பதாக அமெரிக்க உளவுத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதலில் இந்தியத் தரப்பில் இதுவரை 20 சிப்பாய்கள் சாவடைந்திருப்பதாக இந்திய இராணுவம் அறிவித்திருக்கின்ற நிலையில், சீனா தரப்பில் 43 சிப்பாய்கள் உயிரிழந்திருப்பதாக ஒரு தகவல் வெளியா னது. ஆனால் சீனா இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை. இந்த நிலையில், லடாக்கில் நடந்த மோதலில் சீனா தரப்பில், இராணுவத்தின் மூத்த அதிகாரி உட்பட 35 பேர் உயிரிழந்திருப்பதாக அமெரிக்க உளவுத்துறைத் தகவலை மேற்கோள் காட்டி, அமெரிக்கச் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஒரே நாளில் 2000!

இந்தியாவில் இதுவரையில்லாத வகையில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாவால் 2 ஆயிரத்து 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

10 ஆயிரத்து 974 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்தது. ஒரு நாளில் மாத்திரம் 2ஆயிரத்து 3பேர் உயிரிழந்தமை அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இந்தியா முழுதுமான கொரோனா உயிரிழப்புகள் 11ஆயிரத்து 921 ஆக அதிகரித்துள்ளன. அதிகளவாக மகாரா;டிராவில் ஆயிரத்து 409, டெல்லியில் 437, தமிழகத்தில் 49, பேரும் உயிரிழந்துள்ளனர். இன்று காலை 9 மணிக்கு இந்திய சுகாதாரத்துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாத் தொற்றால் 2ஆயிரம் பேர் உயிரிழந்த விடயம் தெரிய வந்திருக்கிறது.

# கலிபோர்ணியா காட்டுத் தீ குற்றத்தை ஏற்றது நிறுவனம்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 2018ஆம் ஆண்டில் ஏற்பட்ட காட்டுத்தீயில் 84 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தில், ஒரு பெருநிறுவனம் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டது.

பசுபிக் கேஸ் மற்றும் எலக்ட்ரிக் என்கிற அந்த நிறுவனம் தனது மின் பகிர்வு இணைப்புகளைச் சரிவரப் பராமரிக்காததால் காட்டுத்தீ உண்டானது என்று தெரிவித்துள்ளது. காட்டுத்தீ உருவானதற்கு தங்களது நிறுவனத்தின் தவறே காரணம் என அது குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து அந்த நிறுவனத்துக்கு 3.5 மில்லியன் டொலர்கள் குற்றப் பணம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

குறித்த காட்டுத்தீயில் இறந்தவர்களில் வயதான வர்களும், மாற்றுத்திறனாளிகளுமே அதிகம். நிறையப் பேரின் உடல்கள் எரிந்த நிலையில் கார்களில் கண்டெடுக்கப்பட்டன.

தங்களது அக்கம் பக்கத்தினருடன், தப்பித்துச் செல்லும்போது காட்டுத்தீயில் சிக்கி அவர்கள் இறந்துள்ளனர் என்று தெரியவந்தது. 2018ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் இவ்வாறு உயிரிழப்புகளையும், பெரும் அழிவையும் ஏற்படுத்திய குறித்த காட்டுத் தீ ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த நிறுவனத்துக்கே தற்போது தண்டனையாக 3.5மில்லியன் டெலர் அறவிடப்பட்டுள்ளது.

# தூது விடுகிறது தென்கொரியா நிராகரிக்கின்றது வடகொரியா





வடகொரியாவுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் சிறப்புத் தூதர்களை அனுப்பவிருந்த தென் கொரியாவின் தீர்மானத்தை வட கொரியா நிராகரித்தது.

கொரியாக்களிடையே 2018ஆம் ஆண்டில் நடந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாகக் குறித்த இரண்டு நாடுகளின் எல்லை நகரத்தில் தொடர்பு அலுவலகம் அமைக்கப்பட்டிருந்தது. அதை வட கொரியா தகர்த்த மறுநாள் தென்கொரியா தூதர்களை அனுப்பு முடிவுசெய்தது.

வடகொரியா அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. தென்கொரியாத் தலைவர் மூன் தனது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுங் யூ -யோங் மற்றும் உளவுத் தலைவர் சு ஹூன் ஆகியோரையே வட கொரியாவுக்குத் தூதர்களாக அனுப்ப முன்வந்தார்.

ஆனால் வட கொரியாத் தலைவர் கிம் ஜோங் உன்னின் சகோதரியும், ஆளும் கட்சியின் மூத்த அதிகாரியுமான கிம் யோ ஜோங், இது தென்கொரியாவின் தந்திரோபாய மற்றும் தீய திட்டம் என்றுகூறி அதை நிராகரித்தார். தென் கொரிய அதிகாரிகளின் திறமையின்மை மற்றும் பொறுப்பற்ற தன்மையால் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பது சாத்தியமற்றது, சரியான விலை செலுத்தப்படும் போது மட்டுமே இதை நிறுத்த முடியும். தென்கொரியத் தலைவர் மூன் 2018ஆம் ஆண்டில் எட்டப்பட்ட ஒப்பந்தங்களில் எதையும் செயற்படுத்தத் தவறிவிட்டார்.

அமெரிக்கா சார்புடன் செயற்பட்டார் என்றும் அவர் மேலும் கூறினார். வட கொரியாவின் நியாயமற்ற இந்த நடத்தையை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று தென் கொரியா அதிபர் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்று மற்றும் இனவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் அமெரிக்கா அல்லாடிக் கொண்டிருக்கும்போது வடகொரியாவின் முரண்போக்கு அதிகரித்திருப்பது கவனிக்கத்தக்கது என்கின்றனர் அரசியலவதானிகள்.

# கொரோனாவுக்கு புதிய சிகிச்சை

கொரோனாவுக்கு ஒரு புதிய சிகிச்சை முறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். கொரோ னாத் தொற்றுடையவரின் குரு தியில் கொரோனாத் தொற்றுக்கு எதிராகப் பாதுகாப்பளிக்கும் நோய் எதிர்ப்பு பொருளைக் கண்டுபிடித்து (இம்யுனோ குளோபுலின் - இது குருதியில் உள்ள பிளாஸ்மா செல்களால் உருவாக்கப்படுகிற புரதம்) அதிலுள்ளபுரதத்தைக்கொண்டு, பாக்ரீயா அல்லது வைரஸ் போன்ற நோயை உருவாக்கு கிறபெளிப்பொருள்களை அடையாளம் கண்டு அவற்றை அழிக்கவும், செயலற்றவையாக்கவும் முயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். இதை விலங்குகள் மற்றும் மனித செல் வளர்ப்புப் பரிசோதனையில் கண்டறிந்து இருக்கிறார்கள்.

இத்தகைய 'அன்டிபாடி' களை ஊசி வழியாகக் கொரோனா வைரஸ் தொற்று ஆரம்ப நிலையில் உள்ள நோயாளிகளுக்குச் செலுத் தலாம் என்றும் இதன்மூலம் அவர்களுக்கு கொரோனா வைரஸ் அளவு குறையும், நோய் கடுமையாவது தடுக்கப் படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த ஆராய்ச்சியை அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், லாஜோல்லா நகரில் உள்ள ஸ்கிரிப்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ஆராய்ச்சி பற்றிய கட்டுரை 'சயன்ஸ்' பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது.

# 2021 வரை மூடப்படுகிறது ஆஸி.

2020 ஆம் ஆண்டு முடியும்வரை ஆஸ்திரேலியாவில் எல்லைகள் மூடப்படும் என்று அந்தநாட்டின் வர்த்தகத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். சீனாவின் வூஹான் நகரிலிருந்து பரவிய கொரோனா வைரஸ் காரணமாக கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக உலக நாடுகள் அவற்றின் அன்றாடச் செயல்பாடுகளிலிருந்து முற்றிலுமாக முடங்கியுள்ளன.

கொரோனா பரவலை முற்றிலுமாகத் தடுக்கும் வகையில் உலக நாடுகள் அனைத்தும் எல்லை மூடலைப் பின்பற்றி வருகின்றன. இந்தச் சூழலில் ஆஸ்திரேலியாவில் கொரோனா பரவல் 75சதவீதமளவு கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், 2020ஆம் ஆண்டுவரை எல்லை மூடலைத் தொடர இருப்பதாக அந்தநாடு தெரிவித்துள்ளது.

எனினும் சில விலக்குகளையும் ஆஸி. அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து ஆஸ்திரேலிய வர்த்தகத்துறை அமைச்சர் பிர்மின்கங் செய்தியாளர் சந்திப்பில் கூறும்போது, 'வெளிநாடுகளிலிருந்து திரும்பும் ஆஸ்திரேலியர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்தி நோய்ப் பரவலைத் தடுத்து வருகிறோம். ஆஸ்திரேலியாவில் எல்லை மூடல் 2020 ஆம் ஆண்டு வரை தொடரும்.

எனினும் இதிலிருந்து சர்வதேச மாணவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது' என்று தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவில் கொரோனா வைரஸால் 7ஆயிரத்து 370 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 ஆயிரத்து 859 பேர் குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவுக்கு மருந்து ரெடி!





டெக்ஸாமெதாசோன் என்ற ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள மருந்து ஒன்று கொரோனா வைரஸால் கடும் பாதிப்புக்கு உள்ளானவர்களின் உயிரைக் காப்பதற்குச் செயலாற்றுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த விலையில் பரவலாகக் கிடைக்கின்ற இந்த மருந்து கொரோனா வைரஸ் உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்கவல்லது என்பது தெரியவந்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் தருகின்ற கண்டுபிடிப்பு இது என்று இதைக் கண்டறிந்த பிரிட்டன் ஒக்போரட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நோயெதிர்ப்பு சக்தி கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடும் போது, அந்தப் போராட்டம் அளவு கடந்து செல்லுமானால், அது உடலுக்குச் சேதம் ஏற்படுத்தும். இந்தச் சேதத்தைத் தடுப்பதற்கு இந்த மருந்து உதவி செய்வதாகத் தெரிகிறது.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு, இலேசான அறிகுறிகள் மட்டுமே காணப்படும் நோயாளிகளுக்கு இந்த மருந்தால் பயன் ஏதுமில்லை. மாறாகச் சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு, சுவாசிப்பதற்கு மருத்துவமனை உதவி தேவைப்படுகிறவர்களுக்கு இந்த மருந்து பயனளிக்கிறது.

# ஹொலிவூட் ஆரம்பம்!




கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாகக் கிட்டத்தட்ட 3 மாதங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹொலிவூட் படப்பிடிப்புப் பணிகளை மீண்டும் தொடங்குவதற்கு அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில அரசு அனுமதியளித்தது.

இதையடுத்துப் பிரபல ஹெலிவூட் திரைப்படமான 'ஜுராசிக் பார்க்'கின் 6ஆவது பாகமான 'ஜுராசிக் வோர்ள்ட் டொமினியன்' திரைப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று பிரபல தயாரிப்பு நிறுவனமான 'யுனிவெர்சல்' கலையகம் தெரிவித்தது. அதோடு 'அவதார் 2'க்கான படப்பிடிப்பும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காகக் கொரோனா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நிமித்தம் 3000ஆயிரம் கோடி(இந்திய மதிப்பில்) செலவிடப்படவுள்ளது.

# ஜேர்மனியில் இராணுவக் குறைப்பு

## டொனால்ட் ட்ரம்ப் தகவல்

ஜேர்மனியில் அமெரிக்கச் சிப்பாய்களின் எண்ணிக்கை 25 ஆயிரமாகக் குறைக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

1949ஆம் ஆண்டில் உருவான நேட்டோ அமைப்பில் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜேர்மனி உட்பட 29 நாடுகள் உள்ளன. உறுப்பு நாடுகளுக்கிடையே பாதுகாப்பு ரீதியிலான உறவை வலுப்படுத்துவதையும், ஆயுதங்களை இறக்குமதி, ஏற்றுமதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பு அமைக்கப்பட்டது.

உறுப்பு நாடுகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய 29 நாடுகளைச் சேர்ந்த சிப்பாய்கள் உறுப்பு நாடுகளில் முகாமிட்டு இராணுவ உதவிகளை வழங்குகின்றனர். அந்தவகையில் ஜேர்மனியில் அமெரிக்கச் சிப்பாய்கள் 52 ஆயிரம் பேர் உள்ளனர்.

இந்த நிலையில் ஜேர்மனியில் உள்ள 9 ஆயிரம் அமெரிக்கச் சிப்பாய்களைத் திரும்பப் பெற இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அண்மையில் அறிவித்தார்.

அமெரிக்காவின் இந்த முடிவுக்கு வருத்தம் தெரிவித்த ஜேர்மனி இரு நாடுகளின் உறவும் சிக்கலாக இருப்பதாக கூறியது. இந்த நிலையில் ஜேர்மனியில் அமெரிக்கச்சிப்பாய்கின் எண்ணிக்கை 25 ஆயிரமாக குறைக்கப் படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போதே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

# களத்தில் போராடிய புலிகளான எங்களுக்கே தீர்வைப் பெற்றுத்தர அதிகம் உரிமை உண்டு

## விடுதலைப் புலிகள் மக்கள் பேரவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

களத்திலே போராடிய போராளிகள் நாங்கள். எங்களுக்கே அதிகமான உரிமை இருக்கின்றது இந்த மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் பேரவைத் தலைவர் த.இ.மலரவன்.

இன்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலத்திலே இருக்கின்ற தமிழர்களிடம் பேசி களத்திலே இருக்கின்ற எமது உறவுகளுடனும் உரையாடிய பின்னரே நாங்கள் தேர்தல் களத்திற்கு வந்திருக்கின்றோம். தவிர ஏனைய கட்சிகளை விமர்சிப்பதற்கோ அல்லது ஏனைய கட்சிகள் அதை செய்யவில்லை,இதை செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டவோ வரவில்லை. எமது மக்களுக்காக நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதற்கான பயணம்தான் இது.

நாங்கள் போராளிகள் என்ற அடிப்படையில் அனைத்துத் தரப்பினருடனும் உரையாடி வருகின்றோம். ஏனென்றால் அரசியல் என்பதும், போராளிகள் என்பதும் பொது மக்களுக்காகத் தான். போராளிகளுக்கான தனிப்பட்ட அரசியல் என்று ஒன்று இல்லை.

விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையானது போராளிகள் அனைவரையும் ஒன்றிணைத்து, தமிழ்க் கட்சிகளுடனும் பேசி அனைவரும் எதிர் வரும் காலத்தில் ஓரணியில் திரட்டி மக்களின் பலத்தைப் பலமாக்குவதை நோக்கமாகக் கொண்டது.

நாங்கள் இன்னொருவருடன் சேர்ந்து செயற்படுவோம் என்பதையும் தாண்டி, எங்களுடன் அனைவரையும் சேர்த்துக்கொண்டு விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையை பலப்படுத்திக்கொண்டு பயணிப்பதுதான் எங்களுடைய நோக்கம்.

இது சம்பந்தமாக நாங்கள் போராளிகளுடனும், மக்களுடனும் கலந்துரையாடி இருக்கின்றோம் – எனத் தெரிவித்தார்.

# அறையில் பூட்டி வைத்து தாக்கினர் வன அதிகாரிகள் மீது முறைப்பாடு

## முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் மூன்று இளைஞர்கள் பதிவு செய்தனர்

முள்ளியவளை பிரதேசத்தில் அமைந்துள்ள வன பரிபாலன திணைக்களத்தின் முல்லைதீவு வட்டார அலுவலகத்தில் மது போதையில் இருந்த ஊழியர்கள் தம்மை அலுவலகத்திற்குள் அடைத்து வைத்து தாக்கினர் என்று மூவர் முள்ளியவளைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் ஒன்றை நேற்று மாலை பேராறு பகுதியில் வன பரிபாலனத் திணைக்கள அதிகாரிகள் மறித்தனர். ஆனால் வாகனத்தை நிறுத்தாத அதன் சாரதி டிப்பரை முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் கொண்டு சென்று நிறுத்தினார்.

பொலிஸ் நிலையத்திற்கு வந்த வன பரிபாலனத் திணைக்கள அதிகாரிகள், டிப்பர் உரிமையாளரையும் சாரதியையும் தாம் கைது செய்யப் போகிறார்கள் என்றும் டிப்பரையும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப் போகிறார்கள் என்றும் பொலிஸாரிடம் கூறினர்.

இதையடுத்து உரிமையாளரையும் சாரதியையும் அவர்களுடன் அவர்களது வாகனத்தில் அனுப்பி வைத்த பொலிஸார், மற்றொருவர் மூலம் டிப்பர் வாகனத்தை வன பரிபாலன திணைக்கள அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அப்படி வாகனத்தை ஓட்டிச் சென்ற தன்னை மது போதையில் இருந்த அதிகாரிகள் தாக்கினர் என்றும் தன்னை வீட்டிற்கு ஏற்றிச் செல்ல வந்த தனது தம்பி மற்றும் அவரது நண்பரையும் அவர்கள் அறைக்குள் பூட்டி வைத்துத் தாக்கினர் என்றும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

மூவரில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவர்கள் மூவரும் தாக்கப்பட்டது பற்றிய தகவல் அறிந்து வன பரிபாலன திணைக்கள அலுவலகத்தின் முன்பாக கிராம இளைஞர்கள் பலர் ஒன்றுகூடியதை அடுத்து அந்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் இளைஞர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தியதுடன் சம்பந்தப்பட்டவர்களைப் பொலிஸ் நிலையத்தில் சென்று முறையிடும்படி அறிவுறுத்தினர்.

வனத் திணைக்கள அதிகாரிகள் போதையில் இருப்பதை சோதிக்குமாறு இளைஞர்கள் வற்புறுத்தியபோதும் பொலிஸார் அதைச் செய்ய முடியாது என்று மறுத்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என முள்ளியவளை போலீசார் தெரிவித்தனர்

இதேவேளை, நேற்று வன பரிபாலன அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட டிப்பர் வாகனம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அதன் உரிமையாளரும் சாரதியும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். வாகனமும் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டது.







# திருகோணமலையில் கைக்குண்டு வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

எப்.முபாரக்

திருகோணமலை, ஜூன் 17

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைக்குண்டு ஒன்றினை வைத்திருந்த சந்தேக நபரை இம்மாதம் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க இன்று உத்தரவிட்டார்.

திருகோணமலை திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடந்த வருடம் திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியில் கைக்குண்டினை வீசித் தங்கும் விடுதியொன்றை சேதப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டியுள்ள பொலிஸார் அவரிடம் இருந்து மற்றொரு கைக்குண்டைத் தாம் கைப்பற்றினர் என்றும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir
பிறந்தநாள் விழா


நாளைய (19.06.2020) தலைப்பு
பிறந்தநாள் விழா

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

⋆ சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.

⋆ சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கறுப்பு வெள்ளையாக அமையலாம்.

⋆ தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.

⋆ தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

⋆ போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# திருக்கோவிலில் கூட்டமைப்பின் பிரசாரம் இன்று தொடங்கியது





(எஸ்.கார்த்திகேசு)

திருக்கோவில் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரம் இன்று ஆரம்பம்.

மக்கள் ஆணை வழங்கினால் நேர்த்தியான அரசியலை, மக்கள் பணிகளை முன்னெடுப்பேன் என்று வேட்பாளர் அ.தமிழ்நேசன் தெரிவித்தார்.

தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் இருந்து இறை வழிபாடுகளுடன் பிரசாரம் ஆரம்பமாகியது. சுபநேரத்தில் ஆலய வழிபாடு செய்து தேங்காய் உடைத்து தனது தேர்தல் பிரச்சாரத்தினை ஆரம்பித்தார் தமிழ்நேசன்.

அங்கு அ.தமிழ்நேசன் தெரிவித்தவை வருமாறு:

இந்த தேர்தலில் மக்களின் ஆணை கிடைக்கின்ற போது மக்களின் மனங்களை வெற்றி கொள்ளக்கூடிய வகையில் நேர்மையான, நேர்த்தியான அரசியல் பணிகளை முன்னெடுப்பேன் எனத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் எனது அரசியல் பயணம் வெருமனே நாடாளுமன்றத் தேர்தலுக்காக அமைந்ததில்லை இன விடுதலை போராட்ட காலம் தொடக்கம் ஜனநாயக போராட்டம் வரை தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடியவன்.

எனது தாய் தந்தையரும் இன விடுதலைப் போராட்டங்களுக்காக வாழ்நாள் முழுவதையும் தியாகம் செய்தவர்கள். எனவே நான் சிறுவயதில் இருந்தே தமிழ் மக்களின் மனங்களின் வடுக்களை நன்கு அறிந்து வைத்து இருக்கின்றேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எனக்கு ஆணை வழங்கி நாடாளுமன்ற செல்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கினால் எனது அரசியல் பணிகள் புனிதமானதாகவும் மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வை அமைத்துக் கொடுப்பதாகவும் அமையும் என வேட்பாளர் அ.தமிழ்நேசன் தெரிவித்து இருந்தார்.

# கொரோனாவை எதிர்க்கிறது 'டெக்ஸாமெதாசோன்'

டெக்ஸாமெதாசோன் என்ற ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள மருந்து ஒன்று கொரோனா வைரஸ் தொற்றால் கடும் பாதிப்புக்கு உள்ளான நோயாளிகளின் உயிரைக் காப்பதற்குச் செயலாற்றுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த விலையில் பரவலாகக் கிடைக்க வாய்ப்புள்ள இந்த மருந்து கொரோனா வைரஸ் உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்கவல்லது என்பது தெரியவந்துள்ளது. மிகக் குறைந்த அளவு வழங்கக்கூடிய



டெக்ஸாமெதாசோன், கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் தருகின்ற கண்டுபிடிப்பு என்று பிரிட்டன் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வுக் குழு ஒன்று இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியிருக்கிறது. வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ள நோயாளிகள் உயிரிழக்கும் வாய்ப்பை மூன்றில் ஒரு பங்கு இது குறைக்கிறது என்றும், ஒட்சிசன் செலுத்தப்படும் நிலையில் உள்ள நோயாளிகள் உயிரிழக்கும் வாய்ப்பை ஐந்தில் ஒரு மடங்கு குறைக்கிறது என்றும் இந்த ஆய்வுக் குழு கண்டுபிடித்துள்ளது. பிரிட்டனில் கொரோனா வைரஸ் தொற்று தொடங்கிய காலத்தில் இருந்தே இந்த மருந்தைப் பயன்படுத்தியிருந்தால் 5 ஆயிரம் உயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும் என்கிறது இந்த ஆய்வுக் குழு.

### மருந்தின் ஆற்றல்

கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ள ஏழை நாடுகளுக்கு இந்த மருந்து பெரிய அளவில் உதவியாக இருக்கும். கொரோனா தொற்று ஏற்படும் ஒவ்வொரு 20 பேரிலும் 19 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்படாமலே குணமாகிவிடுகின்றனர். மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறவர்களில் பெரும்பாலானவர்களும் குணமடைகின்றனர். வெகு சிலருக்கே ஒட்சிசன் செலுத்துவதும், இயந்திர வெண்டிலேட்டர் உதவியும் தேவையாக இருக்கிறது. இந்த இடர்பாடு உடைய வெகு சில நோயாளிகளுக்கு டெக்ஸாமெதாசோன் பயனளிப்பது தெரியவந்துள்ளது. பலவகை உடல் பிரச்சினைகளால் ஏற்படுகிற அழற்சிகளைக் குணப்படுத்த இந்த மருந்து ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. மனித உடலின் நோயெதிர்ப்பு அமைப்பு கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடும்போது, அந்தப் போராட்டம் அளவு கடந்து செல்லுமானால், அது உடலுக்குச் சேதம் ஏற்படுத்துவதாக மாறிவிடும். இந்தச் சேதாரத்தைத் தடுப்பதற்கு இந்த மருந்து உதவி செய்வதாகத் தெரிகிறது. நோய்க்கு எதிராக உடல் ஆற்றும் மிதமிஞ்சிய எதிர்வினைக்குப் பெயர் 'சைட்டோகைன் புயல்' இந்த மிதமிஞ்சிய எதிர்வினை சாவையும் ஏற்படுத்தக்கூடியது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகக் குழு நடத்திய இந்த ஆய்வில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 2ஆயிரம் பேருக்கு டெக்ஸாமெதாசோன் வழங்கப்பட்டது. இந்த மருந்து வழங்கப்படாத 4ஆயிரம் நோயாளிகளோடு இவர்களை ஒப்பிட்டுப் பார்த்தார்கள். வென்டிலேட்டரில் வைக்கப்பட்டிருந்த கோவிட் – 19 நோயாளிகளுக்கு இந்த மருந்தை வழங்கியபோது அவர்கள் இறக்கும் வாய்ப்பை இது 40 முதல் 28 சதவீதம் வரை குறைத்தது. ஒட்சிசன் தேவைப்பட்ட நோயாளிகளுக்கு இந்த மருந்தை வழங்கி அவர்கள் உயிரிழக்கும் வாய்ப்பை இது 25 முதல் 20 சதவீதம் வரை குறைத்தது.

### இறப்பைக் குறைத்த முதல் மருந்து

இதுவரை கொரோனா நோயாளிகளின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதாகக் கண்டறியப்பட்ட மருந்து இது ஒன்றே. இது பெரிய அளவில் இறப்பைக் குறைக்கிறது. இது பெரிய முன்னேற்றம் என்று கூறியுள்ளார் இந்தக் குழுவின் முதன்மை ஆய்வாளர் பேராசிரியர் பீட்டர் ஹார்பி. வென்டிலேட்டரில் சிகிச்சை பெறும் 8 நோயாளிகளில் ஒருவரை இந்த மருந்தின் உதவியோடு காப்பாற்றலாம் என்று இந்தக் குழுவின் தலைமை ஆய்வாளர் பேராசிரியர் மார்ட்டின் லான்ட்ரே கூறியுள்ளார். ஒட்சிசன் செலுத்தப்படும் நோயாளிகளுக்கு இந்த மருந்தை வழங்குவதால் 20தொடக்கம் 25 நோயாளிகளில் ஒருவரின் உயிரைக் காக்கலாம்.

### மருந்தகங்களில் வாங்கிப் பயன்படுத்தக்கூடாது

இது மிகவும் இலாபமானது. 10 நாள்கள் வரையில் டெக்ஸாமெதாசோன் வழங்கிச் சிகிச்சையளித்தால் ஒரு நோயாளிக்கு 5 பவுண்டுகளே செலவாகும். இது உலக அளவில் கிடைக்கும் மருந்தும்கூட. மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிற கோவிட் – 19 நோயாளிகளுக்குத் தாமதிக்காமல் இந்த மருந்தைப் பொருத்தமான நேரத்தில் வழங்கலாம். ஆனால், மக்கள் மருந்துக்கடைக்குச் சென்று வாங்கிவந்து இந்த மருந்தைப் பயன்படுத்தக்கூடாது என்கிறார் லான்ட்ரே. கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு, இலேசான அறிகுறிகள் மட்டுமே காணப்படும் நோயாளிகளுக்கு இந்த மருந்தால் பயன் ஏதுமில்லை. குறிப்பாக, சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு, சுவாசிப்பதற்கு மருத்துவமனை உதவி தேவைப்படுகிறவர்களைத் தவிர பிற நோயாளிகளுக்கு இந்த மருந்தால் பயனில்லை.

> கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு, இலேசான அறிகுறிகள் மட்டுமே காணப்படும் நோயாளிகளுக்கு இந்த மருந்தால் பயன் ஏதுமில்லை. குறிப்பாக, சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு, சுவாசிப்பதற்கு மருத்துவமனை உதவி தேவைப்படுகிறவர்களைத் தவிர பிற நோயாளிகளுக்கு இந்த மருந்தால் பயனில்லை.

### கைவிடப்பட்ட குளோரோகுயின்

கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்று பரிந்துரைக்கப்படும் மருந்துகளைப் பரிசோதித்துப் பார்த்து அவற்றில் எவை உண்மையில் உதவிகரமாக, ஆக்கபூர்வமாக இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்காக நடத்தப்படும் 'ரெக்கவரி ட்ரையல்' என்ற ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ரெக்கவரி ட்ரையல் கடந்த மார்ச் மாதத்திலிருந்து நடந்து கொண்டிருக்கிறது. மலேரியா மருந்தான ஹைட்ரொக்சிகுளோரோகுயின் கூட ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால், இந்த மருந்தால் இறப்பும், இதயக் கோளாறும் அதிகரிப்பதாக எழுந்த கவலையை அடுத்து இது கைவிடப்பட்டது.

### ரெம்டிசிவிர் பயனளிக்கிறது

'ரெம்டிசிவிர்' என்ற வைரஸ் கொல்லி மருந்தும் இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கொரோனா வைரஸ் நோயாளிகள் குணமடைவதற்கு எடுத்துக்கொள்ளும் காலத்தை இது குறைப்பது கண்டறியப்பட்டு, பிரிட்டன் தேசிய சுகாதார சேவை மூலம் இது பயன்படுத்தப் படுகிறது.




### முடக்குவாதம், ஆஸ்துமாவுக்குப் பயன்படுத்திய மருந்து

கோவிட் – 19 நோயாளிகளின் இறப்பு விகிதத்தை குறைக்கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ள முதல் மருந்தான டெக்ஸாமெதாசோன் ஒன்றும் புதிய




மருந்தல்ல. அது ஏற்கெனவே முடக்குவாதம், ஆஸ்துமா உள்ளிட்ட பல நிலைகளுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துதான். வென்டிலேட்டரில் வைக்கப்படும் கோவிட் – 19 நோயாளிகளில் பாதிப் பேர் இறந்துவிடுகின்றனர். இந்த நிலையில், இத்தகைய நோயாளிகளின் இறப்பு விகிதத்தை இந்த மருந்து மூன்றில் ஒரு பங்கு குறைக்கும் என்பது பெரிய விடயம். மிக மோசமான நிலையில் உள்ள நோயாளிகளுக்குக் குருதிக் குழாய் மூலம் இந்த மருந்தை ஏற்றலாம். மற்றவர்களுக்கு மாத்திரையாக வழங்கலாம்.

இது தவிர, கோவிட் – 19 நோயாளிகளின் சிகிச்சையில் உதவுவதாக கண்டறியப்பட்டுள்ள ஒரே மருந்து ரெம்டிசிவிர் என்னும் வைரஸ் கொல்லி மருந்துதான். இது, நோயாளிகள் குணமடைவதற்கான காலத்தை 15 நாள்களில் இருந்து 11 நாள்களாகக் குறைப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், ரெம்டிசிவிர் உயிரிழப்புகளைக் குறைப்பதாக காட்டும் அளவுக்கு வலுவான ஆதாரங்கள் இல்லை. அது தவிர, ரெம்டிசிவிர் புதிய மருந்து. அதன் விலை இன்னும் அறிவிக்கப்படவில்லை.

நன்றி - பி.பி.சி.தமிழ்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு









# அடர்ந்த காட்டிற்குள் பெரும் கஞ்சாச் சேனைகள் 'டிரோன் கமரா' மூலமாக கண்டுபிடித்து அழிப்பு!

டிரோன் கமராவின் மூலம் அடர்ந்த காட்டிற்குள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட கஞ்சாவுடன்கைதான சந்தேக நபர்கள் மூவரும் வெள்ளவாய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த படவுள்ளனர்.

நேற்று செவ்வாய்கிழமை அதிகாலை கிடைத்த தகவலின் அடிப்படையில் மொனராகலை மாவட்டத்தில் தனமன்வில அடர்ந்த காட்டுப்பகுதிகளான மலகாறுவ மற்றும் அமேகமுவ என்ற இடங்களில் இருக்கும் இரு கஞ்சா சேனைகள் சுற்றிவளைக்கப்பட்டன.

இந்தச் சுற்றி வளைப்பில் மொனராகலை, அம்பாறை, பண்டாரவளை மதுவரித் திணைக்களத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 20 பேர் கொண்ட குழு ஈடுபட்டது

பெரிய அளவிலான கஞ்சாசேனை டிரோன் கமரா உதவியுடன் கண்காணிப்பு செய்யப்பட்டு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையில் 3 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.



## தனமன்வில வனத்தில் அதிரடி நடவடிக்கை;

## மூவர் சிக்கினர்; ஏனையோர் தப்பியோட்டம்

அதேசமயம் அருகில் இரு வேறு இடங்களில் சேனையில் இருந்த மற்றைய சந்தேகநபர்கள் தப்பி சென்றுள்ள நிலையில் அவர்களால் பயிரிப் பட்டு அறுவடைக்குத் தயாராக இருந்த கஞ்சா செடிகள் பிடுங் கப்பட்டு தீ இட்டு அழிக்கப்பட்டன.

இவ்வாறு சுமார் 2 ஏக்கருக்கு அதிகமான நான்கு கஞ்சா சேனைகள் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றி வளைப்பு தொடர்பாக அம்பாறை மாவட்ட மதுவரி அத்தியட்சகர் என்.சுசாதரன் தெரிவித்தவை வருமாறு:-



அதிகாலை வேளை எங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மொனராகலை மாவட்டத்தில்தனமன்வில அடர்ந்த காட்டுப்பகுதியில் மலகாறுவ மற்றும் அமேகமுவ என்ற இடங்களில் இருக்கும் இரு கஞ்சா சேனைகளை சுற்றிவளைப்பு செய்தோம். மொனராகலை அம்பாறை பண்டாரவளை மதுவரி திணைக்களத்திலிருந்தும் 20 பேர் கொண்ட குழாம் இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்டது.

இந்த சுற்றிவளைப்பின் போது 3 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். மற்றும் இரு இடங்களில் இருந்த சந்தேக நபர்கள்தப்பிசென்றுள்ளனர்.அதேவேளை அவர்களால் பயிரிப்பட்ட கஞ்சா செடிகள் எங்களால் அழிக்கப்பட்டன.

செவ்வாய் அதிகாலை முதல் மாலை 5 மணி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஐந்து தோட்டங்கள் அழிக்கப்பட்டன.

இரண்டு அடி முதல் ஏழு அடி முதல் வளர்ந்த 10 ஆயிரம் கஞ்சா செடிகளை மண்ணில் இருந்து பிடுங்கி எடுப்பதற்கு சிரமத்தை எதிர்கொண்டோம். ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட பெறுமதியான செடிகள் சுற்றிவளைப்பின் மூலம் கண்டறிந்தோம். இந்த சுற்றிவளைப்பின் போது டிரோன் கமராவை பயன்படுத்தி இருந்தோம்.ஏற்கனவே ஒரு இடம் அடையாளப் படுத்ப்பட்ட நிலையில் ஏனைய இடங்களை ட்ரோன் கமராவின் மூலம் கண்டறிந்தோம். அடர்ந்த காட்டிற்குள் யானை தொல்லைகளுக்கு நடுவில் இந்நடவடிக்கையை மேற்கொண்டோம்.

இச்சுற்றிவளைப்பில் கைதான சந்தேக நபர்கள் எமது தடுப்பு காவலில் வைக்கப் பட்டு வெள்ளவாய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த படுவார்கள். கைதான இவர்களில் அதிகமானோர் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள். இதன் உரிமையாளர்கள் தப்பித்து சென்றுள்ளனர். இவர்கள் களை பிடுங்குதல் தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்.

இவ்வாறான சந்தேக நபர்களுக்கு பல ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றோம் . மேலும் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபர் இவ்வாறான நடவடிக்கைகளுக்காக மூன்று தடவைகளுக்கு மேல் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டவர். இவர் தனது சீவனோபாயத்திற்காகவே குறித்த செயலை செய்கிறார் என எம்மிடம் குறிப்பிட்டுள்ளார் - என்றார்.

# கல்முனை விகாரைக்கு தென்னங்கன்றுகள் வழங்கல்

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய சுகாதார அமைச்சின் ஆயுள்வேதத் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைய 'நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வோம் கொரோனாவை ஒழிப்போம்' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை ஶ்ரீ சுபத்திராம விகாரைக்கு தென்னங்கன்று வழங்கிவைக்கும் நிகழ்வு விகாரை வளாகத்தில் இன்று நடைபெற்றது.

நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் கே.எல்.எம்.நக்பர், விவசாய திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீர் உட்பட திணைக்களத்தின் அதிகாரிகள் நேரடியாக விகாரைக்கு சென்று விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்தின தேரரிடம் தென்னங்கன்றை வழங்கிவைத்தனர்.

இதன்போது விகாரைக்கு வருபவர்களுக்கு வழங்குவதற்கான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆயுள்வேத மருந்து பக்கெட்டுக்களும் விகாராதிபதியிடம் கையளிக்கப்பட்டன.







# ஹிருணிகாவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை

இளைஞன் ஒருவனை கடத்திச் சிறை வைத்திருந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அழைப்பாணை விடுத்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி, ஹிருணிக்காவுக்குச் சொந்தமானதாக கூறப்படும் வாகனம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாகவே ஜுலை மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன ஹிருனிகாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# தமிழகத்தில் தங்கியிருந்த 53 பேர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக தமிழகத்தில் மாட்டிக்கொண்டிருந்த 53 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தின் மூலம் அவர்கள் இன்று புதன்கிழமை காலை நாட்டை வந்தடைந்தனர்.

சென்னையில் இருந்து வருகை தந்துள்ள இவர்களில் இருவர் சிறுவர்கள் என கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாடு திரும்பிய அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவு கிடைக்கும் வரை அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த ஹோட்டல்களில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று விமான நிலைய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# கொரோனா தோட்டம்!








உலகை புரட்டிப்போட்ட கொவிட்19 ஞாபகார்த்தமாக பலநாடுகளும் பல நிறுவனங்களும் பலரும் பலகோணங்களில் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றன.

கொவிட் 19 தாக்கம் இன்னும் முற்றுமுழுதாக எமைவிட்டு நீங்கிவிடாத இன்றைய சந்தர்ப்பத்தில் சம்மாந்துறையில் ஒரு பாடசாலை சற்று வித்தியாசமான வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை கொவிட்19 ஞாபகார்த்தமாக ஒரு விவசாயத் தோட்டத்தை அமைத்துள்ளது.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் இன்று பாடசாலைக்கு வருகை தந்து அத் தோட்டத்தைப் பார்வையிட்டார். பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அமீர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகளும் உடனிருந்தனர்.

கல்லூரி அதிபர் எச்.எம். அன்வர்அலி பணிப்பாளர் நஜீம் தலைமையிலான கல்வி அதிகாரிகள் குழுவினரை வரவேற்று தோட்டத்தைக் காண்பித்தார்.

தோட்டத்தில் கத்தரி, வெண்டி போன்ற பயர்கள் பயிரிடப்பட்டுள்ளன

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முடிவு

கொரோனா தொற்றின் காரணமாக நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிவாரணம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

கொரோனா தொற்றினால் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் 50 வீதமான உள்ளூராட்சி மன்றங்கள் நிதி நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன எனப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் 347 உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன.

இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிகள் தொடர்பிலான அறிக்கையை துரிதமாக சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்றவுடன் நிவாரணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# தொழிற் பயிற்சி நிலைங்கள் ஜுலை 6 முதல் தொடக்கம்

*கைத்தொழில் கல்லூரிகள், தொழிற்பயிற்சி மத்திய நிலையங்கள் மற்றும் ஜெர்மனி தொழிற்பயிற்சி நிலையங்களை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்க தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.*

*சுகாதார அமைச்சின் பரிந்துரைகளின் கீழ் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.*

*நாட்டில் 39 கைத்தொழில் கல்லூரிகள் காணப்படுகின்றன.*

*இந்த கல்லூரிகளில் ஒரு லட்சத்து 10 ஆயிரத்திற்கும் அதிக மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.*

# பாடசாலை வளாகங்களை சுத்தம் செய்வது ஆரம்பம்

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலை வளாகத்தை சுத்தம் செய்யும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தினங்களில் கொழும்பில் உள்ள பிரதான பாடசாலைகளைச் சுத்தம் செய்து முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஜுன் 29 ஆம் திகதி முதல் ஜுலை 5 ஆம் திகதி வரையில் ஏனைய பாடசாலைகளை சுத்தம் செய்ய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# 7 மாதங்களாக சம்பளமின்றி மட்டு. கணனி உதவியாளர்கள்

## சம்பளம் கேட்டு ஜனாதிபதிக்கு மனு

கடந்த ஏழு மாதங்களாக எதுவித கொடுப்பனவுமின்றி சேவையாற்றிவரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி கணணி உதவியாளர்களின் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்று புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி கணணி உதவியாளர்கள் இந்தக் கோரிக்கையினை முன்வைத்தனர்.

இதன்போது ஊர்வலமாக சென்று மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் சுதர்ஷனி ஸ்ரீகாந்த்திடம் மனு ஒன்றினையும் அவர்கள் கையளித்தனர்.

கடந்த நல்லாட்சி அரசினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிகளின் கடமையாற்றுவதற்கு 59 சமுர்த்தி கணணி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு மூன்று மாதங்கள் பயிற்சி வழங்கப்பட்டு நியமனத்திற்குள் உள்வாங்கப்பட்ட நிலையில் இதுவரையில் அவர்களுக்கான சம்பளம் வழங்கப்படவில்லை.

வாகரை தொடக்கம் துறைநீலாவணை வரையிலான சமுர்த்தி வங்கிகளுக்கு இந்த சமுர்த்தி கணணி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

சம்பளம் இன்றிக் கடமையாற்றும் தாங்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியிலேயே தினமும் கடமைக்குச் சென்றுவருகின்றனர் என்று கணனி உதவியாளர்கள் தெரிவித்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அரச உதவிகள் வழங்கும்போது தாங்கள் அர்ப்பணிப்புமிக்க சேவையினை வழங்கிய நிலை யிலும் இதுவரையில் தமது சம்பளப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தாதது கவலைக்குரியது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது சம்பள பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு தமது பிரச்சினையை தீர்க்க உதவுமாறும் அவர்கள் வேண்டுகோள்விடுத்தனர்.

# ஐக்கிய மக்கள் சக்தியே தேர்தலில் கூடுதலான ஆசனங்களைப் பெறும்

## முன்னாள் அமைச்சர் மஹ்ரூப் தெரிவிப்பு

எப்.முபாரக்



ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை பொதுத் தேர்தலில் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றும் என அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேற்பாளரும் முன்னாள் அமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

முள்ளிப்பொத்தானை பகுதியில் இன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் ஆட்சி சின்ன பின்னமாகி நிர்வாகம் குழம்பிப்போயுள்ளது. நாட்டில் இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்றவர்களின் ஆதிக்கம் கூடிச்செல்கின்றது. நல்லாட்சி அரசிற்கு மாற்றீடான சேவைப் போக்குகளே நாட்டில் அரங்கேறிச் செல்கின்றன.

மக்களின் வரிச்சுமை மற்றும் மக்களின் அன்றாட பொருட்களின் விலையேற்றம் தலைக்கு மேல் நிற்கின்றன. நாட்டு மக்கள் சிந்தித்து செயற்படக்கூடிய தேர்தலாக இது கணிக்கப்படுகின்றது.

சிறுபான்மை மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

சிறுபான்மை மக்களின் வாக்குகளைச் சுரண்டுவதற்காகவும், மூளைச் சலவை செய்வதற்காகவும் ஒரு கூட்டம் அலைந்து திரிகின்றது இதற்கு நீங்கள் அடிமைப்பட்டு விடக்கூடாது – என்றார்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2020 இல் வெளியிடப்பெற்றது.